**(Under Section.173 BNSS)**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8082809

C

1. District மாவட்டம் : Coimbatore   PS: காவல்நிலையம் : V&AC   Year: ஆண்டு 2024   FIR No.: மு.த.அ. எண் 06/2024/AC/CB   Date: நாள் 11.09.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018.   Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல் 10.09.2024   Date to : நாள் வரை
Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல் 16.00 hrs   Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.09.2024   Time நேரம் : 14.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D. Vol - II   Time நேரம் : 14.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் at about 7Km, South
Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி O/o. The Junior Engineer, Engineering section, VOC Park, Central zone, Coimbatore City Municipal Corporation, Coimbatore.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. P. Kaviyarasan   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o. Periyasamy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு   (d) Nationality : நாட்டினம் Indian   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Inspection cell Inspector   (g) Address : முகவரி O/o. Inspection cell officer, Collectorate, Coimbatore district.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. M. Vimalraj age 32, S/o. Madasuvaran, Junior Engineer, Engineering Section, VOC Park, Central zone, Coimbatore city Municipal Corporation, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant.
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) (Under Section 173 BNSS)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted:-

Separate sheets herewith attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tmt. C. Latha Rank Inspr. of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS VAAC, Coimbatore on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 11/09/24

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 11/09/2024

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 11.09.2024 @ 16.00 hrs.

Name: பெயர் R. Ezhilarasi
Rank: நிலை Inspector of Police No. எண்
Vigilance and Anti-Corruption
Coimbatore.
11.09.2024

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்கள் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 06/2024/AC/CB u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

இன்று 11.09.2024-ம் தேதி 14.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.P.கவியரசன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 06/2024/AC/CB u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ஆக 14.15 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அந்த புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், P.கவியரசன், முதுநிலை வருவாய் ஆய்வாளர்/ ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண். 179/2024/ஐ1, நாள்: 11.09.2024 அம்மா, பொருள்: திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம் - கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் பொறியியல் பிரிவு அலுவலகம், கோயம்புத்தூர் - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்பந்தமாக. 10.09.2024-ம் தேதி மாலை 03.00 மணியளவில், கோயம்புத்தூர் மாநகராட்சியின் மத்திய மண்டலதிற்குட்பட்ட 80, 81 மற்றும் 83-வது வார்டுகளின் பொறியியல் பிரிவு அலுவலகத்தில் இளநிலை பொறியாளராக பணிபுரியும் திரு.மா.விமல்ராஜ் என்பவர் மேற்படி வார்டுகளில் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்படும் அனைத்து சிவில் வேலைகளையும் ஆய்வுசெய்து அதற்கான பட்டியல் தொகையினை தயாரித்து சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு சமர்ப்பிப்பதற்கு லஞ்சம் பெற்றுவருவதை வழக்கமாக கொண்டிருப்பதாகவும், மேலும் அவர் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் தனியார்

பொருட்காட்சி நடத்துபவர்களிடம் அவர்களுக்கான அடிப்படை தேவைகளான குடிநீர், கழிப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் லஞ்சம் கேட்டுவாங்குவதை வழக்கமாக கொண்டுள்ளதாகவும் நம்பத்தகுந்த தகவல் கிடைக்கப்பெற்றது. அதனடிப்படையில் மேற்படி அலுவலகத்தை ஆய்வுக்குழு ஆய்வாளராகிய நான் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினருடன் மாலை சுமார் 4.00 மணி முதல் கண்காணித்து, அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் கோயம்புத்தூர் வ.உ.சி. பூங்காவின் தெற்குபார்த்திருந்த பிரதான நுழைவாயிலின் அருகில் தெற்கு பார்த்து அமைந்திருந்த கோவை மாநகராட்சியின் மத்திய மண்டலதிற்குட்பட்ட 80, 81 மற்றும் 83-வது வார்டுகளின் பொறியியல் பிரிவு அலுவலகத்திற்குள் நுழைந்து அவ்வலுவலகத்தின் பிராதான அறைக்கு அடுத்தாற்போல் அமைந்திருந்த அறையில் கிழக்கு பார்த்து அமர்திருந்தவரிடம் நான் என்னையும் என்னுடன் வந்த கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினரை அறிமுகப்படுத்திக்கொண்டு, அவ்வலுவலகத்தை திடீர் சோதனை செய்ய வந்திருக்கும் விபரம் தெரிவித்து அந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் விமல்ராஜ் என்றும் தான் கடந்த 01.04.2022-ஆம் தேதி முதல் கோவை மாநகராட்சியின் மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண்கள் 80, 81 மற்றும் 83 ஆகிய வார்டுகளுக்கு இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அப்போது அவருக்கு எதிரே இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் சுப்பரமணியன் என்றும் தான் RS புரத்தில் உள்ள RR Promoters என்ற நிறுவனத்தில் Admin Head/PRO-வாக கடந்த 11-வருடங்களாக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அதனை தொடர்ந்து மேற்படி இளநிலை பொறியாளரிடம் பணம் பற்றிக்கேட்க அவர் தனது பர்சில் வைத்திருந்த ரூ.1,080/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்தப்பணம் குறித்து கேட்க அவர் கைச்செலவிற்காக வைத்திருந்த தனது சொந்தப்பணம் என்று தெரிவித்தார். அதனால் அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்படி இளநிலை பொறியாளார் அமர்ந்திருந்த டேபிளின் வலது

புறம் இருந்த மூன்று டிராயர்கள் மற்றும் இடது புறம் இருந்த ஒரு டிராயர் ஆகியவற்றை சோதனை செய்ததில் அதில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் இருந்தன. அதனை தொடர்ந்து இளநிலை பொறியாளரது இருக்கைக்கு வலது புறம் இருந்த பச்சை நிற இரும்பு பீரோவை இளநிலை பொறியாளரது உதவியுடன் திறந்து பார்த்ததில் அதில் இருந்த ரேக்குகளில் அலுவலக கோப்புகள் மற்றும் ஒரு HP Laptop Bag ஆகியவை இருந்தன. மேற்படி Laptop Bag குறித்து இளநிலை பொறியாளர் திரு.விமல்ராஜிடம் கேட்க அது தன்னுடையது என்று தெரிவித்தார். அந்த Laptop Bag-யை சோதனை செய்ய அதன் உள்பகுதிகளில் ஒன்றில் மடித்து வைக்கப்பட்ட நிலையில் 500 ரூபாய் நோட்டுக்களும், அதன் மற்றொரு உள்பகுதியில் இரண்டு 500 ரூபாய் நோட்டு கற்றைகளும் காணப்பட்டன அவற்றை எண்ணிப்பார்த்த போது மேற்படி மடித்து வைத்த நோட்டுகளில் ரூ.500X30=15,000/- மற்றும் மேற்படி இரண்டு 500 ரூபாய் நோட்டு கற்றைகளை எண்ணிபார்த்ததில் அவற்றில் 500X157=78,500/- ஆக மொத்தம் ரூ.93,500/- காணப்பட்டது. மேற்படி தொகை ரூ.93,500/-யை பற்றி கேட்க அவற்றை தான் ஒப்பந்ததாரர் ஒருவரிடமிருந்து ரூ.78,500/- மற்றும் வ.உ.சி மைதானத்தில் தற்காலிகமாக இயங்கி வரும் தனியார் பொருட்காட்சி நிறுவனத்திடமிருந்து, மாநகராட்சி சார்பாக மொபைல் டாய்லெட் அமைத்து கொடுக்க ஏற்பாடு செய்ய ரூ.15,000/- ஆகியவற்றை இன்று காலை வாங்கியதாக தெரிவித்தார். எனவே மேற்படி பணம் ரூ.93,500/- லஞ்சமாக பெற்ற பணம் என்பதால் அது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் இளநிலை பொறியாளர் அலுவலகத்தில் அமர்ந்திருந்த திரு.சுப்பரமணியன் என்பவரிடம் பணம் குறித்து கேட்க அவர் தன்னிடமிருந்து 41 எண்ணிக்கையிலான 500 ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய ரூ.20,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார் அதைபற்றி அவரை விசாரிக்க, குனியமுத்தூர் பகுதியில் உள்ள குளத்துப்பாளைம் கிராமத்திலுள்ள தனியார் பள்ளி ஒன்றில் குடிநீர் குழாய் அமைக்கும் பணியை வேலையாட்களை கொண்டு தான் மேற்கொண்டு வருவதாகவும் அப்பணிக்கான கூலியினை தருவதற்காக மேற்படி பணத்தை வைத்திருப்பதாகவும் தெரிவித்து அது குறித்து

அவரிடமிருந்த Whatsapp செய்தியை காண்பித்தார். எனவே மேற்படி பணம் ரூ.20,500/- அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் தனது நிறுவனத்திற்காக கோவை மாநகராட்சிக்குட்பட்ட சலிவன் வீதியில் கட்டிடம் கட்டுவதற்காக கட்டிட அனுமதி வேண்டி ஆன்லைன் விண்ணப்பம் பதிவு செய்திருந்ததாகவும், அது சம்பந்தமாக மேற்படி இடத்தை ஆய்வு செய்வது தொடர்பாக இளநிலை பொறியாளரை சந்திக்க அவ்வலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அதனை தொடர்ந்து அவ்வலுவலகத்தின் மேற்கு பகுதியில் கணினியின் முன் அமர்ந்திருந்தவரை விசாரிக்க அவர் தனது பெயர் கிருஷ்ணகுமார் என்றும் தான் அவ்வலுவலகத்தில் தொழில்நுட்ப உதவியாளராக கடந்த 5 வருடங்களாக ஒப்பந்த ஊதியத்தின் அடிப்படையில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடமிருந்த பணம் குறித்து கேட்க அவர் தன்னிடமிருந்த ரூ.580/-ஐ எடுத்து ஆஜர்செய்தார் அப்பணம் குறித்து கேட்க அது தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால் அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறை முழுவதையும் சோதனை செய்ததில் எதுவும் கைப்பற்றப்படவில்லை. அந்த சமயத்தில் அவ்வலுவகத்திற்குள் நுழைந்த ஒருவரை விசாரிக்க அவர் தனது பெயர் பாலாஜி என்றும் தான் Reliance Jio-நிறுவனத்தில் பணிபுரிந்து வருவதாகவும், கோவை மாநகராட்சிக்குட்பட்ட ராஜ வீதியில் Jio Cable அறுந்துவிட்டதாகவும் அதனை சரி செய்ய அனுமதி கேட்பதற்காக அவ்வலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து கேட்க அவர் தன்னிடமிருந்து ரூ.10,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து கேட்க அந்த பணமானது கடந்த வெள்ளிக்கிழமை அன்று ATM-லிருந்து தனது தந்தையின் வங்கி கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட பணம் என்றும் தெரிவித்தார். அது குறித்து அவரை விசாரித்து அந்த பணம் அவரது சொந்த பணம் என்பதால் அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவ்வலுவலக வளாகத்திலிருந்து வந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் நாகூர்கனி என்றும் தான் உப்பிலிபாளையத்தில் அமைத்துள்ள அவிநாசி மேம்பாலத்தின் மழை நீர் வெளியேற்றும் பணியை செய்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து கேட்க அவர் தன்னிடமிருந்த ரூ.8,600/-ஐ எடுத்து

ஆஜர் செய்தார். அதற்கான சரியான முகாந்திரம் தெரிவிக்காததாலும், மேற்படி பணம் திரு.விமல்ராஜ் என்பவருக்கு லஞ்சமாக கொடுக்க வந்த பணமாக இருக்ககூடும் எனக்கருதி அந்த பணமும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அவ்வலுவலகத்திற்குள் வந்த மற்றொருவரை விசாரிக்க அவர் தனது பெயர் மாசிலாமணி என்றும் தான் அவ்வலுவலகத்தின் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாக சொன்னார். அவரிடம் பணம் குறித்து கேட்க அவரிடமிருந்த பணம் ரூ.2,170/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதைபற்றி விசாரிக்க அப்பணம் தனது வீட்டிற்கு மளிகை பொருட்கள் வாங்குவதற்காக வைத்திருப்பதாக சொன்னார். அதனால் அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவ்வலுவலகத்தின் வெளியே அமர்ந்திருந்தவரை விசாரிக்க அவர் தனது பெயர் தேவராஜ் என்றும். தான் மேற்படி நாகூர்கனிக்கு உதவியாக இருப்பதாகவும் தெரிவித்தார். அவரிடமிருந்து பணத்தை குறித்து விசாரிக்க அவர் தன்னிடமிருந்த ரூ.50/- எடுத்து ஆஜர் செய்து அது தனது சொந்தபணம் என்று சொன்னதால் அப்பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவ்வலுவலகத்தின் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மேற்படி இளநிலை பொறியாளர் திரு.விமல்ராஜ் அவர்கள் பயன்படுத்தி வரும் TN 99 E 3166 என்ற பதிவு எண் கொண்ட சிவப்பு நிற Swift Dzire காரையும் சோதனை செய்ததில் காரிலிருந்து எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் மேற்படி இளநிலை பொறியாளர் திரு.விமல்ராஜ் எனபவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அதனைதொடர்ந்து அவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் வருகைப்பதிவேட்டின் 2024-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்கான பதிவுகள் அடங்கிய இரண்டு தாள்களும் நகல் எடுக்கப்பட்டு அதில் இளநிலை பொறியாளர் திரு.விமல்ராஜ் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனை நடவடிக்கைகளானது 10.09.2024-ம் தேதி இரவு 19.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் அந்த திடீர் சோதனை நடவடிக்கைகளானது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட அலுவலக மடிக்கணினியில் தட்டச்சு

செய்யப்பட்டு அலுவலக பிரிண்டரில் பிரிண்ட் எடுக்கப்பட்டது. மேலும் மேற்படி அலுவலகத்தில் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளையும் இத்துடன் இணைத்துள்ளேன். அதில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமான அனைத்து விவரங்களையும், குறிப்பிட்டுள்ளேன். மேலும் திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,02,100/-, கைப்பற்றப்பட்ட ஆவணம் மற்றும் இளநிலை பொறியாளர் திரு.விமல்ராஜ் என்பவரது வாக்குமூலம் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். எனவே மேற்கண்ட முறைகேடுகளில் தொடர்புடைய திரு.M.விமல்ராஜ், இளநிலை பொறியாளர், பொறியியல் பிரிவு, வ.உ.சி, பூங்கா, மத்திய மண்டலம், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இணைப்பு:- 1). திடீர் சோதனை நடவடிக்கைகள், 2). கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,02,100/- 3).கைப்பற்றப்பட்ட ஆவணம் மற்றும் 4).பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலம் (Sdxxxx) முதுநிலை வருவாய் ஆய்வாளர்/ மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாாள், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர். Respected Madam, I have Received the complaint on 11.09.2024 at about 14.00 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.06/2024/AC/CB u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at about 14.15 hrs (Sd.xxxxxx) R.எழிலரசி, 11/09/2024 Inspr. V&AC, CBE. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுக்குழு ஆய்வாளர் அவர்களால் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலம் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

R. [signature] 11/09/2024

(R.எழிலரசி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.